நாள்.07.04.2026

**அசல் வழக்கு எண். 9/2018**
**பெயர். முகமது மொய்தீன்**

**த.பெ.ஷேக் ஜலாலுதீன்**

**வா.சா.1– பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.6 அ.வ.எண்.64/1949 வழக்கின் பதிவேட்டு நகலை எதற்கு நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் தாத்தா அபுல் ஹசன் மரைக்காயர் குத்தகைதாரர் என்பதற்காக இந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.6 என்பது சமாதான தீர்ப்பாணை ஆனது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ல் சொத்துவிவரத்தில் சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் தாத்தா குத்தகைக்கு பாலாஜி பண்டிதர் டிரஸ்டிடம் வாங்கியுள்ளார் அதற்காக தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.7 சொத்துவிவரத்தில் நத்தம் சர்வே எண்.316/1 ல் தென்புறம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 3 அயிட்டம் உள்ளது. 3 அயிட்டமும் 316/1 யை பொறுத்துதான் என்றால் ஆமாம். வா.சா.ஆ.7 ல் நான்கெல்லைவிவரத்தில் அ.மு.இப்ராகிம் மரைக்காயர் வகையறா மனைக்கும் வீட்டுக்கும் தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.8 எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் தாத்தா அபுல் ஹசன் மரைக்காயர் இறந்துவிட்டதால் என் அப்பா பெயர் ஷேக் ஜலாலுதீன் பெயரில் சுப்பிரமணிய பிள்ளை கிரையம் எழுதிக்கொடுத்தார் அந்த ஆவணத்தைதான் தாக்கல் செய்தேன். வா.சா.ஆ.8 நான்கெல்லையில் அ.மு.இப்ராகிம் கட்டுமானத்திற்கும் நிலத்திற்கும் தெற்கு என்று உள்ளது என்றால் ஆமாம். இந்த பத்திரமும் சர்வே எண்.316/1 யை பொறுத்துதான் என்றால் ஆமாம். வா.சா.ஆ.9 எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் குமரவேல் என்பவர் மீது 1,2 பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் அதற்காக தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.10 எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் குமரவேல் என்பவர் மீது 1,2 பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் அதற்காக தாக்கல் செய்துள்ளேன்.

வா.சா.ஆ.11 எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1,2 பிரதிவாதிகளின் இடம் தென்வடல் 53 என்பதை காட்ட தாக்கல் செய்துள்ளேன். அடியா என்றால் 53 அடிதான். தென்வடல் 53 அடி என்பது இந்த வழக்கு சொத்தை பொறுத்தா என்றால் பிரதிவாதிகள் 316/6, 316/7 யை அவர்கள் வைத்துக்கொண்டு எங்கள் சொத்தில் இடம் உள்ளது

என்று தாய்சுவரை எடுத்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள். தென்வடல் 53 அடி என்பது பிரதிவாதிகளின் இடம்தான். அ.வ.எண்.214/2014 ல் வழக்கறிஞர் ஆணையர் தான் தற்போது இந்த வழக்கை நடத்தி வருகிறார் என்றால் ஆமாம். தென்வடல் 53 அடி என்பது பிரதிவாதிகளின் புல எண்.317/6 ல் கீழ்புற தென்வடல் அளவு என்றால் சரிதான். 53 அடிக்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் 316/1 க்கு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் அவர்களுக்கு 316/1 ல் எந்த இடமும் கிடையாது என்றுதான் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.13 ஆணையர் வரைபடத்தில் 53 அடி எங்குள்ளது என்றால் அடியே போடப்படவில்லை. வா.சா.ஆ.13 ல் வழக்கு சொத்து காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். ஆணையர் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சொத்திற்கு தென்புறம் வழக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.13 ல் 53 அடி என்பது CD என்ற கோட்டிற்கு இடைப்பட்ட தூரம் என்று போடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.13 ல் JF என்ற கோட்டிற்கும் தென்புறத்தில்தான் வழக்கு சொத்து இருப்பதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.